# வெளிநாட்டு தொழிலாளர்களின் ஆட்சேர்ப்பிற்கான புள்ளி முறைமை அமுல்நடாத்தல் தொடர்பான அறிவித்தல்

கொரிய வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு ஆகியன இவ்வருடத்தில் ஆரம்பிக்கவுள்ள வெளிநாட்டு தொழிலாளர்களின் ஆட்சேர்ப்பிற்கான புள்ளி முறைமை அமுல்நடாத்தல் தொடர்பான அறிவித்தலை வழங்குகின்றது.

இந்த EPS-TOPIK அடிப்படையிலான ஆட்சேர்ப்பானது நபரொருவரின் கொரிய மொழி ஆற்றல் மட்டுமன்றி, திறன்கள், உடல் தகுதி அனுபவம் ஆகியவற்றை விரிவான முறையில் பரீட்சித்தலாகும். உடற்தகுதியை பரீட்சித்துப் பார்க்கையில் நிற பார்வையற்றோர் மற்றும் நிற பலவீனமுடனானவர்கள் புள்ளி முறைமை அடிப்படையிலான பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் முள்ளந் தண்டு ஊனம் அல்லது விரல் வெட்டுண்டவர்களும் இந்த புள்ளி முறைமை பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

புள்ளி முறைமையிலான ஆட்சேர்ப்பிற்கு குறித்த கைத்தொழிலுக்காக உச்ச எல்லை புள்ளியை பெறுபவர்களே தெரிவு செய்யப்படுவார்கள். முதலாவது சுற்றில் சித்தியடைவதற்கு அபேட்சகர்களின் புள்ளி மட்டம் ஆகக்குறைந்த மட்டத்திற்கு மேல் இருத்தல் வேண்டும். நிர்மாணத்திற்கான ஆகக்குறைந்த புள்ளி 40, கடற்றொழிலுக்கான ஆகக் குறைந்த புள்ளிகள் 36 ஆகும். அதன் பின்னர், கைத்தொழில்ரீதியில் இரண்டாம் சுற்றிற்காக புள்ளி முறைமையின் இறுதியாக சித்தியடைவதற்கு எதிர்பார்க்கப்படும் 200% ஐ பெறுபவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

முதலாம் சுற்றில் சித்தியடைபவர்களுக்கு இரண்டாம் சுற்றில் திறமை மற்றும் செயற்திறன் பரீட்சைக்கான சந்தர்ப்பம் வழங்கப்படும். இரண்டாம் சுற்றில் அப்பரீட்சைக்காக பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளும் சேர்க்கப்படும். இதற்கமைய அனைத்துப் பரீட்சைகளிலும் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளைக் கூட்டும்போது அதிகூடிய புள்ளிகளை பெற்றுக்கொள்பவர்கள் இந்த புள்ளிகள் அடிப்படையிலான முறைமை மூலம் தெரிவுசெய்யப்படுவர்.

இந்த பரீட்சைச் செயற்பாடுகளின்போது இரண்டாம் சுற்றில் அபேட்சகர்கள் தாங்கள் தெரிவுசெய்து கொண்ட கைத்தொழிலுக்குரிய வேலை அனுபவம் மற்றும் கற்கைநெறியை பூர்த்தி செய்தவர்கள் செயற்திறன் பரீட்சைக்காக ஆவணச் சான்றை சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் முதற் சுற்றில் சித்தியடைந்தவர்கள் அனைவரும் திறன்கள் பரீட்சைக்காக அமர்தல் வேண்டும். திறன்கள் பரீட்சையை எழுதாத அபேட்சகர்கள் புள்ளி முறைமைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

அபேட்சகர்கள் இந்த EPS-TOPIK முதற் சுற்றிற்கு விண்ணப்பிக்கும் முன் தமது நிறக் குருடு மற்றும் நிறப் பார்வை தொடர்பான தகுதிப் பரீட்சையொன்றைச் செய்துகொள்ளல் வேண்டும்.

மேலும், நிறக் குருடு மற்றும் நிற பலவீனமுள்ளவர்கள் இந்த பரீட்சையில் சித்தியடையமாட்டார்கள். யாராவது அபேட்சகரொருவர் உடற் தகுதி செயல்முறை வேலைத்தளத்திற்கு தகுதியற்றவரென தீர்மானிக்கப்பட்டால் அவரும் இந்த தெரிவுகளிலிருந்து விலக்கப்படலாம்.

கொரிய மனிதவளப் பிரிவு கொரிய கைத்தொழிலுக்காக தொழிலாளர்களை ஆட்சேர்ப்புச் செய்கையில் அதை மிகவும் இலகுவாக்குவதற்கு இந்த மதிப்பீட்டுப் புள்ளி முறையை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இந்த புள்ளி முறையை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு உங்களின் செயற்பாட்டு ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

**2017 பெப்ருவரி 27ஆம் திகதி**

**கண்காணிப்பு** : தொழில் வாய்ப்பு மற்றும் தொழிலாளர் அமைச்சு, கொரியா
**நிர்வாகம்** : மனித வள அபிவிருத்தி நிறுவனம்
**ஒத்துழைப்பு** : வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு
இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்

**மதிப்பீட்டு அடிப்படையிலான புள்ளி முறைமையின் கீழ் இந்த ஆட்சேர்ப்பு என்பது என்ன?**

## 01. நோக்கம்

➤ தற்போதுள்ள EPS – TOPIK விதிமுறையினுள் உள்ள வேலை வாய்ப்பு அபேட்சகர்களின் பட்டியல் மூலம் கொரிய வேலை கொள்வோர்களுக்குத் தேவையான இன்னுமொரு தகைமையான வேலைகளை ஒப்படைப்பதற்கு முழுமையான செயற்திறன், தனிநபர் உடற் தகுதி மற்றும் கைத்தொழிலுக்குரித்தான அனுபவங்களை பரீட்சித்துப் பார்ப்பதற்கு முடியாதுள்ளது.

➤ **கொரிய மொழி பேச்சுத் திறனில் குறைந்த மட்டத்திலுள்ளவர்கள் ஆனால் செயற்திறன் தேர்ச்சியின் உயர்ந்த மட்டத்திலுள்ளவர்களுக்கு தற்போதைய முறைமையினுள்ள வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.**

➤ இந்த மட்டுப்படுத்தலை தவிர்த்துக்கொள்வதற்காக கொரியாவின் மனிதவள அபிவிருத்திப் பிரிவு மூலம் இந்த புதிய விதிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தொழிலாளர்களின் தகுதிகள் தொடர்பில் விரிவான முறையில் மதிப்பீடு செய்யப்படும். மொழி ஆற்றல் மட்டுமன்றி வேலை அனுபவம் மற்றும் திறமைகளுக்காக இங்கு புள்ளிகள் வழங்கப்படும்.

➤ இந்த முறையின் மூலம் சரியான தொழிலாளரை தேர்ந்தெடுப்பதற்கு தொழில் கொள்வோருக்கு சந்தர்ப்பம் கிட்டும். இதற்கமைய தொழிலாளரின் EPS-TOPIK பரீட்சை புள்ளிகள் தேசிய தொழில்சார் தகைமைக்கான சான்றிதழ், வேலை அனுபவம் தொடர்பான தகவல்களை தொழில் கொள்வோர் பெற்றுக்கொள்ள முடியும்.

➤ இந்த முறையின் மூலம் கொரிய மொழிக்கு குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ள ஆனால் தொழிலில் அதிசிறந்த செயலாற்றுகை மட்டத்தைக் கொண்டவர்களுக்கு கூடிய சந்தர்ப்பம் கிடைக்கும்.

முதலாவது EPS-TOPIK பரீட்சை சுற்று → இரண்டாவது பரீட்சை சுற்று திறமைகாண் பரீட்சை (கட்டாயம்) + இரண்டாவது சுற்றுப் பரீட்சையின் திறன்களை பரீட்சித்தல் (விருப்புக்குரியது) → மதிப்பீட்டுப் புள்ளிகளுக்கமைய சித்தியடைதல் (கூடிய புள்ளிகள் பெற்றவர் முறைக்கமைய)

↑ புள்ளி முறைமையில் பரீட்சையில் 200 புள்ளிகளுக்கு மேல் பெற்ற அபேட்சகர்கள்

## 02. வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கான புள்ளி முறைமை அடிப்படையிலான புள்ளி முறைமையின் உள்ளடக்கம்:

- **சேர்த்துக்கொள்ளும் விதிமுறை:** (1) முதலாவது சுற்றுப் பரீட்சை (EPS-TOPIK) → (2) இரண்டாவது சுற்றுப் பரீட்சை (திறமைகாண் பரீட்சை + தொழிற்திறன் பரீட்சை) → (3) புள்ளிகளைக் கூட்டுதல்
- **இறுதியாக சித்தியடைந்தவர்களைத் தீர்மானம் செய்தல்** : சித்தியடைந்தவர்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கமைய (கூடிய புள்ளிக்கு முதலிடம்)

**கைத்தொழிலுக்கமைய புள்ளிகள் பகிர்வு**

| கைத்தொழில் | மொத்தப் புள்ளிகள் | EPS புள்ளிகள் | தொழிற் திறன் பரீட்சை | திறமைகாண் பரீட்சை (மேலதிக புள்ளி) | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | தொழில் அனுபவம் (ஒரு வருடத்திற்கு மேல்) | தேசிய தொழில்சார் சான்றிதழ் (120 மணித்தியாலங்களுக்கு மேல்) | அரசினால் வழங்கப்பட்ட சான்றிதழ் |
| உற்பத்தி | 200 | 100 | 100 | 3 | 1 | 1 |
| கடற்றொழில் | 200 | 90 | 110 | 3 | 1 | 3 |

## 03. பரீட்சையின் முதலாவது சுற்று (EPS-TOPIK)

- **பரீட்சைக் காலம் (வினாக்கள்) :** 50 நிமிடங்கள் (வாசித்தல் (20 வினாக்கள்) 25 நிமிடங்கள், செவிமடுத்தல் (20 வினாக்கள்) 25 நிமிடங்கள்)
- **பரீட்சையின் தன்மை:**
- பல்தேர்வு வினாக்கள், செவிமடுத்தலுக்கான பரீட்சை வாசிப்பு தொடர்பான பரீட்சைக்குப் பின் இடம்பெறும்.
- கைத்தொழிலுக்கான புள்ளி பகிர்வு

| உற்பத்தி | கடற்றொழில் |
|---|---|
| 100 புள்ளிகள் (ஒரு வினாவுக்கு 2.5 புள்ளிகள்) | 90 புள்ளிகள் (ஒரு வினாவுக்கு 2.25 புள்ளிகள்) |

- **EPS-TOPIK இல் சித்தியடைபவர்கள்**

  ஒவ்வொரு கைத்தொழிலுக்கும் 150 புள்ளிகளுக்கு மேல் பெறும் அபேட்சகர்களில் தேவைப்படும் எண்ணிக்கைக்கு அமைய சித்தியடைந்தவர்களாக்கப்படுவர். (குறைந்தபட்சம் 40 புள்ளிகள் உற்பத்திப் பிரிவுக்கும் 36 புள்ளிகள் கடற்றொழில் பிரிவுக்கும் பெற்றுக்கொள்ளல் கட்டாயமாகும்.)

  *புள்ளி முறைமை அடிப்படையிலான பரீட்சையில் சித்தியடைபவர்களின் அடிப்படையில் 1 ஆம் சுற்றில் சித்தியடைபவர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

## 04. 2வது சுற்று (தொழிற்திறன் பரீட்சை)

### 01. தொழிற்திறன் பரீட்சை

- தொழிற்திறன் பரீட்சைக்குத் தேவையான கைத்தொழில்: உற்பத்தி, கடற்றொழில்
- மூன்று பகுதிகளைக் கொண்டது

  01. உடல் வலு
  02. நேர்முகப் பரீட்சை
  03. அடிப்படை தொழிற்திறன்

- **மதிப்பீட்டுப் புள்ளி பகிர்வு**

| கைத்தொழில் | மொத்தப் புள்ளிகள் | திறமைப் பரீட்சை | | |
|---|---|---|---|---|
| | | உடற் தகுதி பரீட்சை | நேர்முகப் பரீட்சை | அடிப்படை தொழிற்திறன் |
| உற்பத்தி | 100 | 30 | 30 | 40 |
| கடற்றொழில் | 110 | 30 | 30 | 50 |

### 02. திறன்சார் பரீட்சை

- இலக்குக் குழுவினர் : EPS-TOPIK சித்தியடைந்தவர்கள்

  இந்தப் பரீட்சைக்குத் தகைமை பெறுவோர் தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில்களில் அனுபவமுள்ள, தேசிய மட்டத்தில் சான்றிதழைக் கொண்ட மற்றும் கைத்தொழிலுக்குரித்தான பயிற்சி கற்கை நெறியைப் பூர்த்தி செய்துள்ள முதலாம் சுற்றில் சித்தியடைந்தவர்கள்

- திறன்சார் பரீட்சைக்கான மாதிரிகளை அனுப்பும் முகவர்நிலைய இணையதளப் பக்கத்தில் அல்லது பதிவு செய்யும் இடத்தில் பெற்றுக்கொள்ளலாம். உரித்தான வேலை அனுபவம், பூர்த்தி செய்யப்பட்ட கற்கைநெறிக்கான சான்றிதழ் மற்றும் தேசிய சான்றிதழ்களின் பரீட்சித்தலுக்காக மாதிரிகளை தயவு செய்து பூர்த்தி செய்து அவ்வாவணங்களை சமர்ப்பிக்கவும்.
- ஏதாவது அபேட்சகரொருவர் விண்ணப்பிக்கும் கைத்தொழிலுக்குரிய பயிற்சியைப் பெற்றிருக்காவிடின், சான்றிதழ்கள் இல்லாவிடின், சேவை அனுபவங்கள் இல்லாதுவிடின், இந்த திறமைப் பரீட்சைக்கான பூர்த்தி செய்ய வேண்டியதில்லை என்பதுடன், அவ்வாறானவர்கள் இப்பரீட்சைக்காகத் தோற்ற வேண்டியதில்லை.
- உரிய திகதி: இரண்டாவது சுற்றுப் பரீட்சை நடைபெறும் இறுதி நாள் வரை இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.

### 03. திறன்சார் பரீட்சைக்கு ஒப்படைக்கப்பட்ட ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கும் செயன்முறை:

- யாராவது அபேட்சகரொருவரினால் போலியான சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்குமானால் அவர்கள் பெறுபேறுகள் இரத்துச் செய்யப்படும் என்பதுடன் பட்டியலிலிருந்து பெயர் அப்புறப்படுத்தப்படும். மேலும் இவ்வாறானவர்கள் மூன்று வருடங்களுக்கு EPS தொடர்பான பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்பதற்குத் தடை செய்யப்படுவார்கள் என்பதுடன் குற்றவாளியாகவும் கருதப்படுவார்கள்.

| முதலாவது படிமுறை | | இரண்டாவது படிமுறை | | மூன்றாவது படிமுறை |
|---|---|---|---|---|
| வழங்கப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் பரீட்சித்துப் பார்க்கப்படும் என்பதுடன் அவை சரியானவையா என மேலும் உறுதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.(அனுப்பும் முகவர்நிலையத்தினால்) | → | கைத்தொழிலுக் குரித்தான நேர்முகப் பாரீட்சையின் போது கேட்கப்படும். (கொரிய மனிதவள அபிவிருத்தி அதிகாரிகளினால்) | → | தொழிற்திறன் பரீட்சையின் பின் ஒப்படைக்கப்பட்ட ஆவணங்களில் மென்மேலும் சிக்கல் தன்மைகள் இருக்கின்றதா என பரீட்சித்துப் பார்க்கப்படும். (கொரிய மனிதவள அபிவிருத்திப் பிரிவு மற்றும் அனுப்பும் முகவர்நிலையத்தினால்) |

## 1. பரீட்சையின் முதலாவது சுற்று (EPS-TOPIK)

**முதலாவது சுற்று பரீட்சையை நடாத்தும் செயல்முறை (EPS-TOPIK)**

- முதலாவது சுற்றுப் பரீட்சைக்கான அறிவித்தல் (EPS-TOPIK): 2017 பெப்ருவரி 27ஆம் திகதி
- முதலாவது சுற்றுப் பரீட்சைக்கான விண்ணப்பங்களைக் கோரல் (EPS-TOPIK) 2017 மார்ச் 14-27
- பரீட்சை நடைபெறும் இடம் மற்றும் திகதி தொடர்பான அறிவித்தல்: 2017 ஏப்ரல் 20
- EPS-TOPIK பரீட்சை நடாத்துதல்:2017 ஏப்ரல் – செப்டம்பர் 29 (இன்னும் முற்றாக்கப்படவில்லை)
- பெறுபேறுகளை அறிவித்தல்: 2017 ஒக்டோபர் 13

**1. முதலாவது சுற்றுப் பரீட்சையில் சித்தியடைபவர்களின் உத்தேச எண்ணிக்கை**

| கைத்தொழில் | EPS-TOPIK புள்ளி பகிர்வு | முதலாவது சுற்றில் சித்தியடைபவர்களின் உத்தேச எண்ணிக்கை | இரண்டாவது சுற்றில் சித்தியடைபவர்களின் உத்தேச எண்ணிக்கை | தரம் |
|---|---|---|---|---|
| மொத்தம் | | அறிவிக்க உள்ளோம் | 4000 | முதலாவது சுற்றில் சித்தியடைவதற்கு அபேட்சகர்களின் பெறவேண்டிய குறைந்த பட்ச புள்ளிகளுக்கு மேல் பெறல் வேண்டும். உற்பத்தி – 40 கடற்றொழில் - 36. அதன் பின்னர், கைத்தொழில்ரீதியில் இரண்டாம் சுற்றிற்காக புள்ளி முறைமையின் இறுதியாக சித்தியடைவதற்கு எதிர்பார்க்கப்படும் 150% ஐ பெறுபவர்கள் தெரிவு |
| கைத்தொழில் | 100 | | 1600 | |
| கடற்றொழில் | 90 | | 2400 | |

## 2. கைத்தொழில் மற்றும் உபவகுதிகள்

- அபேட்சகர் ஒரு கைத்தொழிலை (உற்பத்தி அல்லது நிர்மாணம்) அல்லது ஒரு உபவகுதியை மாத்திரமே தெரிவு செய்தல் வேண்டும். தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் எந்தவிதமான மாற்றமும் செய்ய முடியாது.
  - உற்பத்திப் பிரிவின் உபவகுதி - 1. பொதியிடல் 2. அளத்தல் 3. இணைத்தல்
  - கடற்றொழில் பிரிவின் உபவகுதி – 1. கடலில் மீன் பிடித்தல் 2. கடற்கரை சார்ந்த நிலப்பரப்பில் கடற்றொழில்
- ஒரு அபேட்சகர் ஒரு விண்ணப்பத்திற்கு மாத்திரமே தகுதி பெறுவர். பல விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

## 3. தகைமைகள்

a) வயது – 18 – 39 வயதிற்கிடையில் (1977 மார்ச் 15 ஆம் திகதி முதல் 1999 மார்ச் மாதம் 14 ஆம் திகதி வரை பிறந்தவர்கள்)

b) சிறைத் தண்டனை பெற்றவர்களாக அல்லது பாரிய தண்டனை பெற்றவர்களாக இருத்தல் கூடாது.

c) கொரியக் குடியரசினால் திருப்பியனுப்பப்பட்டவர்களாகவோ அல்லது நாடு கடத்தப்பட்டவராகவோ இருத்தல் கூடாது.

d) இந்நாட்டிலிருந்து வெளியேற தடை செய்யப்பட்டவர்களாக இருத்தல் கூடாது.

e) நிறக் குருடு அல்லது நிற பலவீனம் இல்லாதிருத்தல் வேண்டும்.

❖ முள்ளந்தண்டு அங்கவீனம் அல்லது விரல்களில் அங்கவீனம் உள்ளவர்கள் புள்ளி முறைமை அடிப்படையிலான பரீட்சைக்கு தடைசெய்யப்பட்டாலும் EPS-TOPIK பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்படும்.

## 4. EPS-TOPIK பரீட்சைக்கு விண்ணப்பித்தல்

a) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் காலம்: 2017 மார்ச் 14 ஆம் திகதி முதல் 2017 மார்ச் 17 ஆம் திகதி வரை (மு.ப. 9.00 முதல் பி.ப. 4.30 வரை)

b) பதிவு செய்யுமிடங்கள்.

| | பதிவு பிராந்தியம் | பதிவு செய்யக்கூடிய இடத்தின் பெயர் |
|---|---|---|
| 01. | அனுராதபுரம் | இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக பிராந்திய அலுவலகம் இல. 395/12ஏ, முதித்த மாவத்தை, கடபனாஹ, அனுராதபுரம் |
| 02. | பதுளை | இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக பிராந்திய அலுவலகம் இல. 117/3, மஹியங்கனை வீதி, பதுளை |
| 03. | குருநாகல் | இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகபிராந்திய அலுவலகம், இல. 235/32, விஜயபா மாவத்தை, நீர்கொழும்பு வீதி,குருநாகல். |
| 04. | கண்டி | இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக பிராந்திய அலுவலகம் இல. 353, கெஹெல்வில, கிரிபத்கும்புர, கண்டி. |
| 05. | இரத்தினபுரி | இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக பிராந்திய அலுவலகம், இல.6, பட்டுகெதர, இரத்தினபுரி. |
| 06. | வவுனியா | இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக பயிற்சி நிலையம் இல. 56, புகையிரத வழி, வைரவபுளியங்குளம், வவுனியா. |
| 07. | மத்துகம | இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக புலம்பெயர்ந்தோர் வள நிலையம் பண்டாரநாயக்கவத்த, மத்துகமவத்த. மத்துகம |
| 08. | அம்பாறை | இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக பயிற்சி நிலையம், இல. 23/58/ஏ, கெமுனுபுர, அம்பாறை. |
| 09. | மட்டக்களப்பு | இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக பயிற்சி நிலையம், இல. 435/11, கண்ணகி அம்மன் கோவில் பாதை, மட்டக்களப்பு |
| 10. | சிலாபம் | இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக பயிற்சி நிலையம், கொழும்பு வீதி, மையக்குளம், சிலாபம். |
| 11. | தம்புள்ள | இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக பயிற்சி நிலையம், இல. 3, நிஸ்ஸாந்த மாவத்தை, தம்புள்ள |
| 12. | காலி | இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக பயிற்சி நிலையம், இல. 289, கொழும்பு வீதி, மஹாமோதர, காலி. |
| 13. | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம், இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக பயிற்சி நிலையம், இல. 56, செப்பல் வீதி, யாழ்ப்பாணம் |
| 14. | பொலன்னறுவை | இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக பயிற்சி நிலையம் இல. 63, புதிய நகரம், பொலன்னறுவை. |
| 15. | திருகோணமலை | இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக பயிற்சி நிலையம், இல. 344, 4 ஆம் மைல் கட்டை, கண்டி வீதி, திருகோணமலை. |
| 16. | தங்காலை | இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக புலம் பெயர்ந்தோர் நிலையம், யாயவத்த, கொடிகமுவ |
| 17. | சஹணபியச | இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக பயிற்சி நிலையம், இல. 101/5/3, நீர்கொழும்பு வீதி, கட்டுநாயக்க |
| 18. | அத்துருகிரிய | பெருந்தோட்ட தேசிய நிறுவன முகாமைத்துவம், எம்.டி.எச். ஜயவர்தன மாவத்தை, மில்லேனியம் சிட்டி, அத்துருகிரிய. |

c) விண்ணப்பித்தல்: அபேட்சகர் வருகை தந்து விண்ணப்பித்தல் வேண்டும்.

d) தேவையான ஆவணங்கள்